**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை

**இடைக்கால மனு எண். 2/2026 மற்றும் இடைக்கால மனு எண். 3/2026**
**in**
**அசல் வழக்கு எண். 36 /2016**

**இடைக்கால மனு எண். 2/2026 மற்றும் இடைக்கால மனு எண். 3/2026**

சையது அபுதாகீர் ... மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதி

/ எதிர்/

T.M. வேலுச்சாமி ... எதிர்மனுதாரர் / வாதி

இந்த இடைக்கால மனுகள் என் முன் கடந்த 27.03.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொது உத்தரவு**

1. இடைக்கால மனு எண்.2/2026 ஆனது அசல் வழக்கு எண். 36/2016-ல் மனுதாரர் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டதை மீண்டும் விசாரணை (Reopen) செய்ய அனுமதி கோரி சி.பி.சி 151ன் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இடைக்கால மனு எண்.3/2026 ஆனது அசல் வழக்கு எண்.36/2016 மனுதாரரை மீண்டும் வரவழைத்து (Recall ) விசாரிக்க அனுமதி கோரி சி.பி.சி. 18 விதி 17-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி இரண்டு மனுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பதால் இம்மனுகளை ஒன்றாக தீர்மானிக்கப்படுகிறது.

<u>2. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு எண்.2/2026 மற்றும் 3/2026 மனுகளின் சுருக்கம்:-**</u>

2.1 மனுதாரர் அசல் வழக்கில் 3-ம் வது பிரதிவாதி என்றும், இந்நிலையில் கடந்த 25.03.2026-ம் தேதியன்று அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும் அன்றைய தேதியில் தான் நீதிமன்ற வளாகத்தில் இருந்ததாகவும், வழக்கில் மனுதாரரை கூப்பிடும் போது ஆஜராக தவறியதாகவும், எனவே தனது தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டதாகவும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் எனவே மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கு பிரதிவாதி தரப்பில் சாட்சியத்தை மீண்டும் Reopen செய்து தனது தரப்பு சாட்சியத்தை மீண்டும் வரவழைத்து(Recall) விசாரணை செய்ய கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை நிபந்தனையின் பேரில் அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுஅனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. தீர்வு:-**

5.1 வழக்காவணங்களும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது தாவா சொத்தினை பொறுத்து எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஏஜென்டுகளோ, எதிர்மனுதாரர்களின் உத்தரவின் பேரில் செயல்படும் அவர்களது

பணியாளர்களோ வேறுநபர்களோ எவ்வித இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்து.

5.2. இடைக்கால மனு எண்..2/2026 ஆனது அசல் வழக்கு எண். 36/2016–ல் மனுதாரர் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டதை மீண்டும் விசாரணை (Reopen) செய்ய அனுமதி கோரியும், இடைக்கால மனு எண்.3/2026 ஆனது அசல் வழக்கு எண்.36/2016 மனுதாரரை மீண்டும் வரவழைத்து (Recall ) விசாரிக்க அனுமதி கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதனை அறிய முடிகிறது.

5.3 மனுதாரர் தனது மனுவில் 25.03.2026–ம் தேதியன்று அசல் வழக்கில் 3–ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும் அன்றைய தேதியில் தான் நீதிமன்ற வளாகத்தில் இருந்ததாகவும், வழக்கில் தன்னை கூப்பிடும் போது ஆஜராக தவறியதாகவும், எனவே தனது தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டதாகவும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், இம்மனுகளை அனுமதிக்காதது பட்சத்தில் தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்று கூறியுள்ளார்.

5.4 இந்நிலையில் அசல் வழக்கினை பரிசீலனை செய்கையில் இம்மனுவின் மனுதாரர் தரப்பில் கடந்த 20.02.2026–ம் தேதியன்று முதல் விசாரணை செய்யப்பட்டு, அவர் தரப்பில் 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், பின்னர் அன்றை தினம் இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில், இம்மனுவின் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கானது ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் 04.03.2026–ம் தேதியன்று இம்மனுவின் மனுதாரரை, இம்மனுவின் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை செய்துள்ளார். பின்னர் அன்றைய தினம் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியத்திற்காக 11.03.2026, 17.03.2026, மற்றும் 24.03.2026 ஆகிய தேதிகளில் வழக்கானது ஒத்திவைக்கப்பட்டதாகவும், ஆனால் மேற்படி தேதிகளில் இம்மனுவின் மனுதாரர் தனது தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், பின்னர் மேற்படி 25.03.2026 தேதியன்றும் மனுதாரர் தோன்றி சாட்சியம்

எதுவும் அளிக்காத காரணத்தினால் வழக்கானது பிரதிவாதியின் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது. எனவே மனுதாரருக்கு உரிய வாய்பானது அளிக்கப்பட்டு அவரது சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் தரப்பில் மேற்படி வாய்தா தேதிகளில் ஏன் இந்நீதிமன்றத்தில் தோன்றவில்லை என்பதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் 25.03.2026 தேதியன்று மனுதாரர் நீதிமன்ற வளாகத்தில் இருந்ததாக மனுதாரர் தனது மனுவில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவரது தரப்பு வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் தோன்றி தனது கட்சிகாரர் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளதாகவும், அவர் இந்நீதிமன்றத்தில் தான் உள்ளார் என்பதையும் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை. எனவே, மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள காரணமானது முழு அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.5 இந்நிலையில், அசல் வழக்கினை பரிசீலனை செய்கையில் கடந்த 2016–ம் முதல் இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சனை இருந்து வருகிறது என்பதையும், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே மூன்று சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் இவ்வழக்கினை நீதியின் முறையில் தீர்வு காண்பதற்கு இறுதியாக இம்மனுவின் மனுதாரருக்கு நிபந்தனையின் பேரில் ஒரு வாய்ப்பானது வழங்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, இந்த மனு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.**

**(1) மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/–த்தை 21.04.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

**(2) இம்மனுவின் மனுதாரர் 21.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தானே சாட்சியாக தோன்றியோ அல்லது மனுதாரர் தரப்பு சாட்சியையோ விசாரணைக்கு முன்னிலைப்படுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.**

**(3) மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளையும் மனுதாரர்கள் பின்பற்ற தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 15.04.2026 நான் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.04.15 18:56:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.

1. மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
2. எதிர்மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
3. நீதிமன்ற சான்றவாணங்கள்:– இல்லை

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.04.15 18:56:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.